யிலிருந்து, மாணவர்கள் கேட்கின்ற பாடத்தில் போதிய அளவுக்கு மார்க் வாங்கியிருந்தால்தான் அந்தப் பாடம் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் வாங்கியிருக்கக்கூடிய மார்க்கின் அடிப்படையில் வேறு பாடம் கொடுத்தால் அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுகிறார்கள். இங்கிலிஷ் மீடியம் கேட்பவர்கள் ஆங்கிலத்தில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். தமிழ் மீடியம் கேட்பவர்கள் தமிழில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். அப்படியானால்தான் மாணவர்களின் விருப்பப்படி கல்லூரி முதல்வர்கள் சப்ஜெக்ட் கொடுக்கிறார்கள். இல்லையென்றால் கொடுக்கப்படுவதில்லை. அதனால்தான் எல்லா இடங்களும் நிரப்பப்பட முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

**அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்**

* 385 **வினா—திரு.** பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு **விடையளிப்பாரா :—**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த திருச்சி மாவட்டத்திற்கு 1971-72-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதுவரை ரூ. 1,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, வீட்டுமனை வழங்குவதற்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் பெரும்பாலும் செலவழிக்கப்படாமல் இருப்பதற்கு, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஆவதே காரணம் என்ற புகார் சொல்லப்படுகிறதே. எனவே, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நிலத்தை கையகப்படுத்துவதில் தாமதமாகிறது என்றக் காரணத்தினால் ஒதுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படவில்லை. பூராவும் செலவழிக்கப்படுகிறது. ஒரே ஒரு முறைதான் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்படாமல் இருந்தது. ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்பட

வேண்டுமென்றும், இனிமேல் பணம் செலவழிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் அவருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 15 லட்சம் ரூபாயும் செல வழிக்கப்பட்டுவிட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : சார், திருச்சி மாவட்டத்தில் அரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு, விளை நிலங்க ளாக இருந்தால் அதை கட்டாயமாகக் கையகப்படுத்தக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : விளை நிலங்களாக இருந்தாலும், அவை தேவையாக இருந்தால், உரிய தொகை யினைக் கொடுத்து கையகப்படுத்தப்படும்.

### குடிசை பகுதிச் சிறுவர்களுக்குப் பயிற்சி முகாம்

* 386 **வினா—திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னையில் குடிசைப் பகுதிச் சிறுவர்களைச் சீர்திருத் தும் வகையில் காவல் துறையினர் பயிற்சி முகாம் ஏதேனும் நடத்தினர்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : (அ) ஆம்.

(இ) 1971-ம் ஆண்டு மே மாதம் 21, 22 மற்றும் 23 தேதிகளில் ஆவடியிலுள்ள டோனிக் கோலா சரகத்திலும் மற்றும் **அதே** ஆண்டு ஜுலை மாதம் 9, 10 தேதிகளில் பூண்டி அணைக்கட்டிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

### கோவை மாவட்டத்தில் அரசு தரிசு நிலங்கள்

* 387 **வினா—திரு. என் மருதாசலம்** : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-1971-ல் கோவை மாவட்டத்தில், சர்க்கார் புறம் போக்கு நிலங்கள் மொத்தம் எவ்வளவு ?